# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2250 /27 - 2021 ඔක්තෝබර් 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.10.21

**2250 / 27 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

**உரித்துப் பதிவு செய்தல்**

## திருத்தம்

1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்

14 ஆம் பிரிவின் கீழ் உரித்து நிர்ணய ஆணையாளரின் தீர்மானத்தை வெளிப்படுத்தல்

மேலேயுள்ள தலைப்பின் கீழ் 2021.03.29 ஆந் திகதிய 2221/19 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரமான மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மொறட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் 557 - ராவதாவத்த கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவினுள் கட்டுபெத்த எனும் கிராமத்தில், 520205 ஆம் இலக்க கடத்திரல் அளவை வரைபடத்தில், பிரிவு இல. 15 இல் 09 ஆம் இலக்க காணித்துண்டின் உரித்து தொடர்பாக அவ்வட்டவணையில்,

“காணி வழக்கிற்கு உட்டபட்ட ஈடு குத்தகை தடுப்புக் கட்டளை பற்றிய விபரங்கள்” என்னும் நிரலில்

1. மேற்படி காணியை அண்மித்துல்ல 2ஏக்கர் காணியுடன் மொரட்டுவ நகர சபையினால் (6 ஏக்கர்) 6ஏக்கர் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேற்படி காணி மற்றும் மேற்படி காணியின் வளாக மேற்படி சபையினால் பூங்கா அல்லது விளையாட்டு மைதானம் மெரட்டுவ பிரதேச பொதுமக்களின் பாவனைக்காக எப்போதும் திறந்து விடப்பட வேண்டும்.
2. நிலத்தின் வசதிகளுக்கு எந்தவித தடங்கல் அல்லது இடையூறு இன்றி ஒரு கல்லில் என்னுடைய சொந்த செலவில் நினைவுப் பலகையை அமைப்பதற்கு மற்றும் பூங்காவின்பெயர், மற்றும் வேறு ஏதாவது பொருத்தமான தகவல்கள் உட்பட , குறிப்புரையை தயார் செய்வதற்கு மேற்குறிப்பிட்ட ஆல்பர்ட் ஹில்டி பிரான்ட் . தியோடர் டி சொய்சா ஆகிய எனக்கு அனுமதி தரப்படவேண்டும் மேற்குறிப்பிட்ட சபைக்கு கையளிக்கப்பட்ட,மேற்படி காணியானது குறித்த சபையின் சொந்த செலவில் நினைவுப்பலகை அல்லது கல் நினைவுச் சின்னம் அல்லது கட்டமைப்பை முறையாகப் பராமரிக்கவேண்டும்.
3. மேற்கூறிய பூங்கா அல்லது விளையாட்டு மைதானம் எப்போதும் “டிசொய்சா பூங்கா” என குறிப்பிடப்படவேண்டும்.
4. மேற்கூறிய காணி மற்றும் வளாகம் மேற்கண்ட சபையால் தன்னார்வமாக பராதீனப்படுத்தக்கூடாது.

5. மொரட்டுவ பிரதேசத்தில் உள்ள மக்களின் நவனுக்காக சபையின் சொந்த செலவில் மேற்படி சபையினால் குறித்த பூங்கா அல்லது விளையாட்டுமைதானம் முறையான நிலையில் குறிப்பிடப்படவேண்டும்.

5.1 மேற்சொல்லப்பட்ட அல்வேட் ஹில்டபிறான் டிசொய்சா ஆகிய யான் மேற் சொல்லப்பட்ட முறையில் சொல்லப்பட்ட காணியையும் , வளவுகளையும் உரித்து மாற்றவும் ஒப்டைக்கவும் நல்உரித்து கொண்டுள்ளேன் , எனவும் சொல்லப்பட்டவை எவ்வித பராதீனப்படுத்தலுக்கு உட்பட்டலை அல்ல எனவும் சொல்லப்பட்டவாறு சொல்லப்பட்ட காணிக்காணதும் , வளவுகளுக்கானதும் அத்துடன் அவற்றின் ஒவ்வொறு பாகத்திற்கான அல்லது பகுதிக்கான உரித்தை எல்லாக்காலங்களிலும் சொல்லப்பட்ட நகர சபைக்கும் அதன் வழி உரித்தினர்க்கும் எப்போர்பட்ட எவரேனும் அத்துடன் ஒவ்வொறு ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் எதிராக இதன் பின்னரான எல்லாக் காலங்களிலும் நிலைநாட்டி காத்துக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் நிலைநாட்டிக் காத்துக் கொடுப்பேன்.

“தீர்தலுக்கான அல்லது இடைநிறுத்திலுக்கான ஈடுகள் பாரதீனங்கள் பற்றிய விபரங்கள் நிரலில் உள்ளடக்கப்படவேண்டும்”.

**பி.எம்.எச். பிரியதர்ஷனி,**
காணி உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
இல. 1200/6, “மிஹிகத மெதுர”,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி.

11 - 30